**இணைப்பு II**

| I<br>சொத்துக்களையும் பொறுப்புக்களையும் வெளிப்படுத்த வேண்டிய நபர்கள் | II<br>வெளிப்படுத்துதல்களை பெற்றுக்கொள்ளத் தகுதியானவர்கள் |
|---|---|
| (அ) சனாதிபதி | இலஞ்சம் அல்லது ஊழல் பற்றிய சார்த்துதல்களைப் புலனாய்வு செய்வதற்கான ஆணைக்குழு |
| (ஆ)பிரதமர், அமைச்சரவை அமைச்சர்கள் மற்றும் அரசியலமைப்பின் உறுப்புரை 45 இன் கீழ் நியமனம் பெற்ற அமைச்சர்கள் | சனாதிபதி அவர்கள் |
| (இ)பாராளுமன்ற உறுப்பினர்கள் | சபாநாயகர் அவர்கள் |
| (ஈ)மாகாணங்களின் ஆளுநர்கள் | சனாதிபதி அவர்கள் |
| (உ)மாகாண சபைகளின் உறுப்பினர்கள் மற்றும் மாகாண பகிரங்க சேவையின் பணியாட்டொகுதி அலுவலர்கள்; | • ஆளுநர் (மாகாண சபைகளின் உறுப்பினர்கள்)<br>• மாகாண சபைகளின் அமைச்சுக்களுக்கு பொறுப்பான செயலாளர்கள் (பிரதம செயலாளர்)<br>• பிரதம செயலாளர் (பதவிநிலை அலுவலர்கள்) |
| (ஊ) உள்ளூர் அதிகாரசபைகளின் தேர்ந்தெடுக்கப்பட்ட உறுப்பினர்கள் மற்றும் பணியாட்டொகுதி அலுவலர்கள்; | • உள்ளூராட்சி சபைகளுக்கு பொறுப்பான அமைச்சர் (உள்ளூர் அதிகாரசபைகளின் உறுப்பினர்கள்)<br>• உள்ளூராட்சி சபைகளுக்கு பொறுப்பான அமைச்சின் செயலாளர் (மாநகர சபை ஆணையாளர்கள்,நகர சபை மற்றும் பிரதேச சபைகளின் செயலாளர்கள்)<br>• மாநகர சபை ஆணையாளர் (மாநகர சபையின் பதவி நிலை அலுவலர்கள்)<br>• நகர சபை செயலாளர் (நகர சபையின் பதவி நிலை அலுவலர்கள்)<br>• பிரதேச சபை செயலாளர் (பிரதேச சபையின் பதவி நிலை அலுவலர்கள்) |
| (எ) சனாதிபதியால் நியமிக்கப்பட்ட நீதிபதிகளும் பகிரங்க அலுவலர்களும்; | சனாதிபதி அவர்கள் |

| | |
|---|---|
| (ஏ) அமைச்சரவையினால் நியமிக்கப்பட்ட பகிரங்க அலுவலர்கள்; | குறித்த நிறுவனத் தலைவர்கள் |
| (ஐ) நீதிச் சேவை ஆணைக்குழுவினால் நியமிக்கப்பட்ட நீதி அலுவலர்களும் அட்டவணைப்படுத்தப்பட்ட பகிரங்க அலுவலர்களும்; | நீதிச் சேவை ஆணைக்குழு செயலாளர் |
| (ஒ) அமைச்சுக்கள் மற்றும் அரசாங்கத் திணைக்களங்களிலுள்ள பணியாட்டொகுதி அலுவலர்கள்; | குறித்த நிறுவனத் தலைவர்கள் |
| (ஓ) அரசியலமைப்பின் 41அ (1) (உ) என்னும் உறுப்புரையின் நியதிகளின்படி நியமிக்கப்பட்ட, பாராளுமன்ற உறுப்பினர்களாகவிராத அரசிய லமைப்புப் பேரவையின் உறுப்பினர்கள்; | சனாதிபதி அவர்கள் |
| (ஔ) அரசியலமைப்பின் 41ஆ என்னும் உறுப்புரைக்கான அட்டவணையில் குறித்துரைக்கப்பட்ட எவையேனும் ஆணைக்குழுக்களின், விடயத்துக்கேற்ப, தவிசாளர் களாக அல்லது உறுப்பினர்களாக நியமிக்கப்பட்ட ஆட்கள்; | சனாதிபதி அவர்கள் |
| (க) இலங்கை மத்திய வங்கி மற்றும் அரச வங்கிளின் பணியாட்டொகுதி அலுவலர்கள்; | • மத்திய வங்கியின் ஆளுநர் (மத்திய வங்கியின் பதவி நிலை அலுவலர்கள்)<br>• குறித்த பொது முகாமையாளர் (அரச வங்கிகளின் பதவி நிலை அலுவலர்கள்) |
| (ங) அரசியலமைப்பின் 41அ (1) (இ) என்னும் உறுப்புரையின்கீழ் அல்லது ஏதேனும் நியதிச்சட்டத் தின்கீழ் தாபிக்கப்பட்ட சுயாதீன ஆணைக்குழுக்களின் பணியாட்டொகுதி அலுவலர்கள்; | குறித்த நிறுவனத் தலைவர்கள் |
| (ச) ஏதேனும் நியதிச்சட்டத்தினால் அல்லது அதன்கீழ் தாபிக்கப்பட்ட சுயாதீன ஒழுங்குபடுத்துகை மற்றும் மேற்பார்வை ஆணைக்குழுக்களின் அல்லது குழுக் களின் தவிசாளர்கள், ஆணையாளர்கள், உறுப் பினர்கள் மற்றும் பணியாட்டொகுதி அலுவலர்கள்; | நியமன அதிகாரி |
| (ஞ) ஏதேனும் நியதிச்சட்டத்தினால் அல்லது அதன்கீழ் தாபிக்கப்பட்ட சபைகளின் தவிசாளர்கள், பணிப்பாளர்கள், உறுப்பினர்கள் மற்றும் ஏதேனும் பகிரங்கக் கூட்டுத்தாபனத்தின் நிறைவேற்று அலுவலர்கள்; | நியமன அதிகாரி |

| | |
|---|---|
| (ட) பாராளுமன்ற உறுப்பினர்களினதும், மாகாண சபைகளின் உறுப்பினர்களினதும் மற்றும் உள்ளூர் அதிகாரசபைகளின் உறுப்பினர்களினதும் தனிப்பட்ட பணியாட்டொகுதி உறுப்பினர்கள்; | நியமன அதிகாரி |
| (ண) (357 ஆம் அத்தியாயமான) தரைப்படைச் சட்டத்தின் ஏற்பாடுகளுக்கிணங்க ஆட்சேர்க்கப்பட்டு பேணப்படும் இலங்கை தரைப்படையின் அலுவலர்கள்; | இராணுவ தளபதி |
| (த) (358 ஆம் அத்தியாயமான) கடற்படைச் சட்டத்தின் ஏற்பாடுகளுக்கிணங்க ஆட்சேர்க்கப்பட்டு பேணப்படும் இலங்கை கடற்படையின் அலுவலர்கள்; | கடற்படைத் தளபதி |
| (ந) (359 ஆம் அத்தியாயமான) இலங்கை வான்படைச் சட்டத்தின் ஏற்பாடுகளுக்கிணங்க ஆட்சேர்க்கப்பட்டு பேணப்படும் இலங்கை வான்படையின் ஆணைபெற்ற அலுவலர்கள்; | விமானப்படைத்தளபதி |
| (ப) 1981 ஆம் ஆண்டின் 15 ஆம் இலக்க, சனாதிபதித் தேர்தல்கள் சட்டம், 1981 ஆம் ஆண்டின் 1 ஆம் இலக்க, பாராளுமன்றத் தேர்தல்கள் சட்டம், 1988 ஆம் ஆண்டின் 2 ஆம் இலக்க, மாகாணசபைகள் தேர்தல்கள் சட்டம், (262 ஆம் அத்தியாயமான) உள்'ர் அதிகாரசபைகள் தேர்தல்கள் கட்டளைச்சட்டம் அல்லது (138 ஆம் அத்தியாயமான) தொழிற் சங்கங்கள் கட்டளைச்சட்டம் என்பவற்றின் கீழான தேர்தல்களின் நோக்கங்களுக்காக ஏற்றங்கீகரிக்கப்பட்ட அரசியற் கட்சிகளின் பதவிதாங்குநர்கள்; | தேர்தல்கள் ஆணையாளர் |
| (ம) (138 ஆம் அத்தியாயமான) தொழில் சங்கங்கள் கட்டளைச்சட்டத்தின்கீழ் பதிவுபெற்ற தொழிற்சங் கங்களின் நிறைவேற்றுனர்கள்; | தொழிலாளர் அமைச்சின் செயலாளர் |
| (ய) 1981 ஆம் ஆண்டின் 15 ஆம் இலக்க, சனாதிபதித் தேர்தல்கள் சட்டம், 1981 ஆம் ஆண்டின் 1 ஆம் இலக்க, பாராளுமன்றத் தேர்தல்கள் சட்டம், 1988 ஆம் ஆண்டின் 2 ஆம் இலக்க, மாகாண சபைகள் தேர்தல்கள் சட்டம் அல்லது (262 ஆம் அத்தியாயமான) உள்'ர் அதிகாரசபைகள் தேர்தல்கள் கட்டளைச் சட்டம் என்பவற்றின்கீழ் நடைபெறவேண்டியுள்ள தேர்தல்களில் தேர்ந்தெடுக்கப்படுவதற்காக பெயர் குறித்து நியமிக்கப்பட்ட வேட்பாளர்கள்; | தேர்தல்கள் ஆணையாளர் |

| | |
|---|---|
| (ர) 2007 ஆம் ஆண்டின் 07 ஆம் இலக்க, கம்பெனிகள் சட்டத்தின் ஏற்பாடுகளின்கீழ் பதிவுபெற்றுள்ள எக்கம்பெனிகளில் இருபத்தைந்து சதவீதத்துக்குக் குறையாத பங்குகள் அரசினால் அல்லது பகிரங்கக் கூட்டுத்தாபனமொன்றினால் வைத்திருக்கப்படு கின்றனவோ, அக்கம்பெனிகளின் தவிசாளர்கள், பணிப்பாளர்கள் மற்றும் பணியாட்டொகுதி அலுவலர்கள்; | கம்பனிகளின் பதிவாளர் |
| (ல) இச்சட்டத்தின் கருத்தெல்லைக்குள்ளான அட்டவணைப்படுத்தப்பட்ட நிறுவனங்களில் உள்ளடக்கப் பட்டனவாகவுள்ள நிதி நிறுவனங்களின் முகாமைத்துவ அல்லது மேற்பார்வைசார் வகிபாகங்களிலுள்ள பணியாட்டொகுதியினர்; | நிறுவனத் தலைவர்கள் |
| (வ) இலங்கை இராஜதந்திரத் தூதரகங்களின் தலைவர்கள்; | சனாதிபதி அவர்கள் |
| (அஅ) இலங்கை இராஜதந்திரத் தூதரகங்களுக்கு அமைச்சரவையினால் நியமிக்கப்பட்ட அலுவலர்கள்; | வெளிநாட்டு அலுவல்கள் அமைச்சின் செயலாளர் |
| (ஆஆ) (180 ஆம் அத்தியாயமான) செய்தித்தாள் கட்டளைச் சட்டத்தின் 2 ஆம் பிரிவின்கீழ் எந்த செய்தித்தாள்கள் தொடர்பில் வெளிப்படுத்துகைகள் செய்யப்பட்டுள்ள னவோ அந்த செய்தித்தாள்களின் தனியுரிமை யாளர்கள், பதிப்பாசிரியர்கள் மற்றும் பதிப்பாசிரியபீட பணியாட்டொகுதியின் உறுப்பினர்கள்; | வெகுஜன ஊடக அமைச்சின் செயலாளர் |
| (இஇ) 1991 ஆம் ஆண்டின் 25 ஆம் இலக்க, இலங்கை தொலைத்தொடர்பாடல்கள் சட்டத்தின் 17 ஆம் பிரிவின்கீழ் உரிமமளிக்கப்பட்ட ஊடகக் கம்பெனிகளின் தனியுரிமையாளர்கள், பதிப்பாசிரியர்கள் மற்றும் பதிப்பாசிரியபீட பணியாட்டொகுதி உறுப்பினர்கள்; | தொடர்பாடல் அமைச்சின் செயலாளர் |
| (ஈஈ) 1973 ஆம் ஆண்டின் 25 ஆம் இலக்க, விளை யாட்டுக்கள் சட்டத்தின் நியதிகளின்படி தாபிக்கப்பட்ட தேசிய விளையாட்டுக் கழகத்தின் பதவிதாங்குநர்கள்; அத்துடன் | விளையாட்டுத்துறை அமைச்சின் செயலாளர் |

| | |
|---|---|
| (உ_உ) வேறு அலுவலர்களின் அந்தந்த அலுவலகங்களில் அவர்கள் புரிகின்ற பணியின் தன்மையைக் கவனத் துட்கொண்டு, அத்தகைய அலுவலர்கள் இலஞ்சத்துக்கு அல்லது ஊழலுக்கு பலியாகக்கூடிய தன்மையைக் கருத்திலெடுப்பதன்மூலம் உயர் ஆபத்து வகுதிகளை ஒழுங்குவிதிகளினால் விதித்துரைக்கப்படக்கூடியவாறான அத்தகைய வேறு அலுவலர்களின் வகுதியினர். | இலஞ்சம் அல்லது ஊழல் பற்றிய சார்த்துதல்களைப் புலனாய்வு செய்வதற்கான ஆணைக்குழுவினால் காலத்துக்கு காலம் விதந்துரைக்கும் அடிப்படையில் |

* வேறேதேனும் குறித்த சட்டத்தின் கீழான நியமங்களுக்கு ஏற்ப சொத்துக்களையும் பொறுப்புக்களையும் வெளிப்படுத்த வேண்டிய நபர்கள்.